பயணிகளை அதிகமாக ஏற்றிக் கொண்டு வரும்போது நடவடிக்கை எடுத்துத் தண்டனைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏறினால் கூட, நின்று கொண்டுதான் போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வெளியூர்களில் செல்லுகின்ற பஸ்களில் அனுமதிக்கப்பட்டிருப்பது போல் இதிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னால் அமரக்கூடிய வகையில் ஒன்றிரண்டு சீட்டுகள் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனையை நடைமுறைப்படுத்துவதில் மிக்க சிரமம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள்.

*437 வினா—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அம்மாவட்டத்தில் உள்ள கண்மாய்களில் விவசாயத் துறையின் மூலம் மின் இணைப்புடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இம்மாவட்டத்தில் கண்மாய்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டம் தற்பொழுது அரசிடம் எதுவும் இல்லை.

*438 வினா—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தாலுகாவில் உள்ள குளங்களில் விவசாயப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின்சார மோட்டார்கள் மூலம் விவசாயிகள் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஆழ்கிணறுகள் மூலம் நிரம்பத் தண்ணீரை கொண்டு வர முடியும் என்று திட்டக் கமிஷன் மூலம் பரிசீலனை செய்தபோது விவரம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதன் மூலமாக முன்னேற்றம் அடைய ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக ஐந்தாண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றம் காணக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, தற்போது அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகள் அமைக்கின்ற முறையில் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டு இருக்கின்றன. 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து இந்தக் கிணறுகள் வெட்டப் பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றுக்கு மின் இணைப்பு இல்லாத காரணத்தால் வெறுமனே சும்மா இருக்கின்றன. ஆகவே, இதற்கு மின் இணைப்புக் கொடுத்து அங்குள்ள விவசாயிகளுக்கு இருக்கின்ற தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். கண்மாய்களில் குழாய்க் கிணறுகள் மூலம் நீர் எடுத்துப் பாசன வசதிக்குக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு எதுவும் இந்த அரசிடம் தற்போது இல்லை என்பதைச் சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகின்றார்கள் அங்கே பெரிய ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன என்று. அந்த குழாய்க் கிணறுகள் குடிநீர்—வடிகால் வாரியத்தின் மூலமாகத் தோண்டப் பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்

எல்லா இடத்திலும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகள் வெட்டப் படுகின்றன. இதன் மூலம் குடிதண்ணீர் தட்டுப்பாடு தீர்ந்து கொண்டு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. புஷ்பராஜ்: அவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நடப்பு ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது. அதைப்போல் பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற புதுக்கோட்டைப் பகுதியிலும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை

*439 வினா—திரு. ரா. பெரியசாமி: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூரில் இயங்கிவந்த கந்தசாரி சர்க்கரை ஆலை மூடியிருப்பதற்குக் காரணம் என்ன?

(ஆ) இந்தத் தொழிற்சாலையைத் திறக்க அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: *

ஒரு விவர அறிக்கை * சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

---

* 374-375-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.